**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| | | |
|---|---|---|
| **M.C.O.P. No. 67/2019** | **Date :** 07.12.2022 | **PW1** |
| Name: பெருமா | W/o. **பழனியப்பன்** | |
| Evidence Recorded Time: 01.11 P.M. to 01.20 P.M. | | |

**குறுக்கு விசாரணை :-**

விபத்து சமயத்தில் நான் டெல்லியில் இருந்து வந்திருந்தேன். விபத்து நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் என் மகள் ஜானகி புகார் கொடுத்தார். அவர் புகார் கொடுக்கும் போது நான் டெல்லியில் வேலை செய்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து ஒரு பிரிவு ரோட்டில் நான் ரோட்டை கடந்து செல்லும்போது மண்ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். சாட்சி தற்போது மண் ரோட்டில் நிற்கும் போது விபத்து நடந்ததாக கூறுகிறார். விபத்து நடந்ததை காட்டக்கூடிய மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய அஜாக்கரதையால்தான் விபத்து நடந்த காரணத்தினால்தான் இரண்டு நாட்கள் கால தாமதத்தோடு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சேலம் அரசு மருத்துவமனையில் 12 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால் சரயல்ல, அறுவை சிகிச்சை செய்தார்கள். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு 6 மாதங்கள் கழித்து டெல்லிக்கு சென்றுவிட்டேன். தற்போது இந்த மனுவில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் காரின் ஓட்டுநருக்கு விபத்து காலத்தில் தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2-ம் எதிர்மனுதாரர் பாலிசி விதிமுறைகளை மீறி உள்ளார் என்றும் அதனால் 3-ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. நான் டெல்லியில் வசிப்பதால் இந்த நீதிமன்றத்தில் இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்து இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு தற்போது 75 வயதாகிறது. எனக்கு வயதாகிவிட்ட காரணத்தினால் என் மகன்கள்தான் என்னை பார்த்து கொண்டு வருகிறார்கள் என்றாலும் மாதம்

ரூ.25000/- வருமானம் ஈட்டி வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பதால் எனக்கு எந்தவிதமான வருமான இழப்பும் இல்லை என்றாலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்